RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22124

OPEN ACCESS

# அமைப்பியல் நோக்கில் கலித்தொகையில் முதற்பொருள்

**சு. அனிதா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் - 636016, தமிழ்நாடு, இந்தியா

# Kalithogai in the study of structural perspectives

**S. Anitha** [a, *]

[a] Department of Tamil, Sri Sarada College for Women (Autonomous), Salem – 636 016, Tamil Nadu, India

* Corresponding Author: sureani01@gmail.com

Received: 29-09-2021
Revised: 23-01-2022
Accepted: 28-01-2022
Published: 30-01-2022

Check for updates

**ABSTRACT**

A scientific approach is being adopted to apply various new theories of research to the manuscripts. Anatomy is one of those principles. Its impact marked a turning point in Western performance. It is considered one of the best research methods of the 20th century and is being used in various fields of social science. One of the most powerful scientific methods in the field of human culture today is structural science, which is an influential scientific method of research in the fields of literature, linguistics, folk culture, sociological politics, and psychology. This method of research is performed today on the story literature that appeared many years ago. Similar studies are currently underway in Tamil. Our ancient Tamil literatures have their own traditional structure. This article sets out to explore the basics of learning structurally

**Keywords:** Structuralism Method, Kaliththogai, Tholkappiyam, Mutharporul

## முன்னுரை

இன்றைய ஆய்வில் பல புதிய உத்திகளும் ஆய்வு முறைகளும் தோன்றியுள்ளன. அதில் ஒன்றுதான் அமைப்பியல் கோட்பாடு (தொடர்பாட்டு ஆய்வுமுறை) என்பதாகும். இவ்வாய்வு முறை இன்று பல ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கதை இலக்கியங்கள் மீது நிகழ்த்தப்படுகிறது. தமிழிலும் இது போன்ற ஆய்வுகள் தற்போது நிகழ்ந்து வருகின்றன. நம் பழந்தமிழ் இலக்கியங்கள் தம் மரபு சார்ந்த அமைப்பியலைப் பெற்று விளங்குகின்றன. அதில் அமைப்பியல் நோக்கில் கலித்தொகையில் முதற்பொருள் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## அமைப்பியல் கோட்பாடு

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இருபது முப்பதுகளிலேயே மொழியில் (Linguistics), உளவியல் (Psychology), பண்பாட்டு இசையியல் (Ethnomusicology), மானிடவியல் (Anthropology) போன்ற துறைகளில் அமைப்பியல் முறையில் ஆய்வுகள் பல நடந்துள்ளன. ஆனால் நாட்டார் வழக்காற்றியலில் இக்காலக்கட்டங்களில் அமைப்பியல் அணுகுமுறை வளரவில்லை. இருப்பினும் விதிவிலக்காகச் சில நூல்கள் எழுந்தன. 1928-இல் உருசிய அறிஞரான விளாதிமிர் பிராப் வெளியிட்ட நாட்டார் கதைகளின் உள்ளமைப்பு (Morphology of the Folk Tale) என்னும் நூல் இத்தகைய விதிவிலக்கான ஒரு நூல் என்பர் (Stephen, 2013). இக்கருத்து மூலம் அமைப்பியல் கோட்பாடு இலக்கியங்களில் எப்போது பயன்படுத்தப்பட்டது என்பது புலனாகிறது.

பக்தவத்சல பாரதி, "தமிழ்ச் சூழலில் அமைப்பியமானது இலக்கியவாதிகளாலும் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வாளர்களாலும் பெரிதும் அணுகப்பட்டுள்ளது. உண்மையில் அமைப்பியமானது எண்ணற்ற துறைகளில் பயன்படுத்தப்படும் ஒரு முக்கிய அணுகுமுறையாகும். விளாடிமிர் பிராப் நாட்டார் தேவதைக் கதைகளை ஆராய்ந்தார். கிளாட் லெவிஸ்ட்ராஸ் தொன்மங்களையும் உறவுமுறையையும் எடுத்துக் கொண்டு ஆராய்ந்தார். ஆலன்டண்டிஸ் வட அமெரிக்க நாட்டார் கதைகளையும் விடுகதைகளையும் ஆராய்ந்தார். கவிதை, தத்துவம், நுண் கலைகள், கட்டடக்கலை போன்ற இன்னும் பிற துறைகளிலும் இதன் செல்வாக்கினை விளங்கிக் கொள்ள முடியும். அமைப்பியம் அடிப்படையிலேயே ஒரு சமூகத்தின் மனம் சார்ந்த சிந்தனை முறையை விளங்கிக் கொள்வதற்குப் பயன்படும் ஓர் அணுகுமுறையாகும்" என அமைப்பியலின் சிறப்பைக் குறிப்பிடுவர் (Stephen, 2013).

"ஓர் ஒழுங்கமைவிலுள்ள 'குறித்த உள்ளடக்கத்தை' அல்லது 'அர்த்தத்தை' ஒதுக்கி வைத்துவிட்டு அதன் அடியிலுள்ள ஆழமான குறிகள், இயங்குறுப்புகள், மரபுகள் போன்றவை எவ்வாறு தனிப்பட்ட அர்த்தங்களை உருவாக்குகின்றன என்று காண்பது தான் அமைப்பிய ஆய்வு" என்றும், 'ஓர் இலக்கியப் பிரதியினை வாசித்தல் என்பது உணவு ஒழுங்கு முறையினைவிடச் சிக்கலான மரபுகளைக் கொண்டது (Poornachandran, 2009). ஆனால் முறையில் ஏறத்தாழ ஒன்றுதான். நிகழ்ச்சிகள், கதைமாந்தர், குறியீடுகள் போன்றவற்றின் அனுபவப் பொருண்மையைத் தூக்கி முதலில் 'அடைப்புக்குள்' போட வேண்டும். அதாவது விலக்கி விட வேண்டும். ஆயின், இந்தத் தனிக்கூறுகள் யாவும் எப்படி நிர்ணயிக்கப்பட்ட செயல்கள், சேகரங்கள், முரண்கள், சமன்பாடுகள் வடிவில் அமைந்துள்ளன் இவற்றின் எல்லைக்குள் வர அனுமதிக்கும் உள்தர்க்கம் (அமைப்பு) என்ன என்பதை வெளிப்படுத்துவதாகவே ஓர் அமைப்பிய ஆய்வு அமையும்' என்றும் குறிப்பிடுவர் பூரணசந்திரன் (Poornachandran, 2009). நம் பழந்தமிழ் இலக்கியங்களும் ஒரு குறிப்பிட்ட பழம்மரபு வடிவில் ஒழுங்கமைவு கொண்டு ஆழமான குறிகளோடு இயங்கி தனிப்பட்ட அர்த்தங்களை உருவாக்கி வாழ்வியலை விளக்கியமை வெளிப்படுகிறது. சங்க இலக்கியத்தில் குறிப்பாக கலித்தொகையில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் அமைப்பு முதலியன தொல்காப்பியரின் முன் அமைப்பியல் விதிப்படி அமைந்துள்ளது.

இக்கலித்தொகை நூலினில் தமிழ் மரபில் அகத்திணை மரபுப்படி பாடல்களும் அதன் அமைப்பும் விளங்குகின்றமையும் சில திணை மயக்கங்களும் கொண்டிளங்க, அதில் கட்டுரை முதற்பொருளை மட்டும் விளக்குவதாக அமைகின்றது.

## முதற்கரு உரிப்பொருள்கள்

முதற்கரு உரிப்பொருட்களே சங்கப் புலவர்கள் அகத்திணைப் பாடல்களைப் பாடுவதற்குப் பெரும் உறுதுணையாக விளங்கியிருக்கின்றன. அன்பின் ஐந்திணை எனப் போற்றப்படும் ஒழுக்கமாகிய உரிப் பொருளைக் கூறுவதற்கு முதல்கருப் பொருள்களாகிய பின்புலம் புலவர்க்குத் தேவையாயிற்று அறிஞர்களும் இக்கருத்தையே வெளிப்படுத்துகின்றனர். அகவாழ்வின் சிறப்பை விளக்கும்போது பின்புலம் பற்றிய உணர்வு சிறப்பாக அமைதல் வேண்டும். முதல்கருப் பொருள் ஆகிய இரண்டும் பின்புல வருணனைக்காகவே கூறப் பெறுகின்றனஎனும் கருத்து முதற்கருப் பொருளின் தேவையை உணர்த்துகிறது (Thani Nayagam, 1953).

மேலும் "மனித வாழ்க்கையாகிய நாடகத்துக்கு முதலும் கருவும் ஆகிய இயற்கை ஆடரங்காக அமைந்துள்ளது" எனும் கருத்தும் 'தமிழ் அகத்திணைப் பாடல்களில் கருத்துப் பின்னப்படும் முறையை முதல், கரு, உரி எனப் பகுப்பது மிகச் சிறந்த நாடக உத்தியாகும்' எனும் கருத்தும் ஈண்டு நோக்கத்தக்கதாகும் (Arumugam, 1958). இதன்மூலம் அகப்பாடல்கள் வழி ஒழுக்கங்களைக் கூறிய பழந்தமிழ்ப் புலவர்களுக்கு, முதல் கருவாகிய இப்பொருள்கள் பெரிதும் துணையாக விளங்கியமை புலப்படுகிறது.

தொல்காப்பியர் அகத்திணையை ஏழாகப் பிரிக்கின்றார். ஒவ்வொரு திணைக்குரிய ஒழுக்கமும் முதல், கரு, உரி என்னும் முப்பொருளையும் கொண்டு விளங்கும். இதனை,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே

நுவலங் காலை முறைசிறந் தனவே

பாடலுட் பயின்றவை நாடுங் காலை”

இந்நூற்பா வழி அறியமுடிகிறது (Ilampuranar, 1969). இந்நூற்பாவில் ‘முறை சிறந்தனவே’ என்றதனால் ‘முதலில் கருவும், கருவில் உரிப்பொருளும் சிறந்து வரும்’ எனக் கூறுவார் நச்சினார்க்கினியர். “முறை சிறந்தன என்பதனால் முதலிற் கருவும் கருவின் உரியும் ஒன்றினொன்று முறையே மேற் சிறப்புடையதாம். அகப்பாடல்களில் உரிப்பொருள் தலையாயதென்பதும் அதற்கு முதலும் கருவும் துணையாகச் சார்ந்து வருபொருள்களாம் என்பதும் வெளிப்படை” எனக் குறிப்பிடுவர் (Natchinarkkiniyar, 1961).

இதன்மூலம் முதல், கரு, உரி ஆகிய முப்பொருள்களும் ஒன்றினொன்று முறையே சிறப்புடையது என்பது வெளிப்படுகிறது. மேலும் நிலத்தையோ, பொழுதையோ அவற்றை நிலைக்களனாகக் கொண்ட கருவையோ விளக்குவது அகப்பாடல் நோக்கம் அன்று. மாறாக உரிப்பொருளை விளக்குவதே அதன் நோக்கமாக அமைகின்றது. உரிப்பொருளை விளக்க, முதல்,கரு என்னும் இரு பொருள்களம் துணையாகின்றன. முதற்பொருளைவிட கருப்பொருளே உள்ளுறை, இறைச்சி எனும் குறியீடுகள் வடிவில் உரிப்பொருள் விளக்கத்திற்குத் துணை செய்தலால், முதற்பொருளினும் கருப்பொருளே சிறப்புடையதாக மதிக்கப்படுகின்றது.

முதல், கரு, உரி என்னும் மூன்றும் உரி, கரு, முதல் என்ற நிரலில் சிறப்பினை உடையதாக விளங்குகின்றன. எனினும் முதலின்றிக் கருவும் உரியும் அமையாதென்பதை உணர்த்தவே முதற்பொருளைத் தொல்காப்பியர் முதலில் கூறியிருக்கின்றார் எனலாம்.

## முதற்பொருள் விளக்கம்

முதற்பொருள் என்பது நிலம், பொழுதுமாகும். மக்கள் வாழ்க்கைக்கு அடிப்படையாக அமைவது இந்நிலமும் பொழுதுமே. அதனாலேதான் இவற்றை முதற்பொருள் என்றழைத்தனர். தொல்காப்பியர்,

“முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்

இயல்பென மொழிய இயல்புணர்ந் தோரே”

இவ்வாறு குறிப்பிடுகிறார் (Ilampuranar, 1969). அகவொழுக்கங்கள் நிகழும் இடத்தையும் காலத்தையும் முதற்பொருள் என்று மொழிவதுதான் மரபாகும். இங்கே “நுண்ணிய மன நிலைகளாக இவ்வொழுக்க உணர்வுகளைப் புலனெறி வழக்கமாக மாற்றி அக்காலக் காட்சிகளைக் கண்முன் கொண்டு நிறுத்தக் கால, இட, கருப்பொருட் பின்னனிகளை அமைத்துக் காட்டுவது அகப்பாடல் மரபு” எனும் கருத்து உறுதிபயப்பதாய் உள்ளது (John Samuvel, 1977).

முதற்பொருளுக்குத் தொல்காப்பியர் வகுத்த மேற்கண்ட நூற்பாவில் அமைந்துள்ள இயல்பு என்ற அச்சொல்லுக்கு இளம்பூரணர் ‘இயற்கை என்பதனால் செய்து கோடல் பெறாமை அறிந்து கொள்க’ என உரை கூறுகிறார் (Ilampuranar, 1969). நச்சினார்க்கினியரும் ‘முதலெனச் சிறப்பித்துக் கூறப்படுவது நிலனும் பொழுதும் என்று கூறுப’ எனச் சுட்டிச் செல்கிறார் (Natchinarkkiniyar, 1961).

இவ்வாறு கூறும் அவர் ‘இயற்கை எனவே செயற்கை நிலனும் செயற்கைப் பொழுதும் உளவாயிற்று’ என்றும் குறிப்பிடுவதை பார்க்க இயலும். ஆனால் செயற்கைப் பொழுதுகள் எவையென அவரும் குறிப்பிடவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

## நிலப்பாகுபாடு

முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் ஆகியவை நானிலங்களாகும். அகத்திணை ஏழினுள் கைக்கிளைக்கும் பெருந்திணைக்கும் நிலம் இல்லை. பாலைக்கும் தனி நிலம் இல்லை. பாலையைப்

பற்றி 'ஒருகால வேற்றுமையால் இரண்டு திங்கள் இயல்பு மாறித் தோன்றும் நிலச்செயற்கையே பாலைத்திணைக்கு இடமாம்' என்கிறார் (Manickanar, 1962). எஞ்சிய நான்கு திணைகளுக்கு நிலத்தை,

"அவற்றுள்

நடுவண் ஐந்திணை நடுவண தொழியப்

படுதிரை வையம் பாத்திய பண்பே"

எனும் நூற்பா வழி குறிப்பிடுகிறார் தொல்காப்பியர் (Ilampuranar, 1969). அதாவது பாலையொழிய ஏனைய நான்கு திணைகளும் நிலம் பெறும் திணைகள் என்பது பெறப்படுகிறது. மேலும் நானிலத்துக்குரிய நிலங்களை,

"மாயோன் மேய காடுறை உலகமும்

சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்

வருணன் மேய பெருமணல் உலகமும்

முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்

சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"

என வகைப்படுத்தியுள்ளார் தொல்காப்பியர் (Ilampuranar, 1969). நிலவகையை இவ்வொரு நூற்பாவிலே கூறுவதோடு தெய்வங்களோடு இணைத்தும் கூறுகிறார். ஆனால் முதல் பொருளின் மற்றொரு கூறாகிய பொழுதினைப் பல நூற்பாக்களைக் கொண்டு விளக்கிச் செல்கிறார்.

பாலைக்கு நிலத்தைத் தொல்காப்பியர் சுட்டிக் கூறவில்லை. ஆனால் "மழையின்றி வளம் குறைந்த காடும் மலையும் கொண்ட பகுதி பாலை" என்றும், 'பாலையானது காட்டு நிலத்தின் சார்பைப் பெரிதும், மலை நிலத்தின் சார்பைச் சிறிதும் பெற்றுத் தோன்றுவதாகும்' என்று மு.அருணாசலம்பிள்ளையும், 'வறட்சி பெற்ற நிலப்பகுதிகள் பழந்தமிழரால் பாலை என்றழைக்கப்பெற்றது (Balasubramanian,, 1962; Arunachalam, 1975). குறிப்பாக மலையும் காடும் வறட்சியுற்ற போது பாலையாகக் காட்சி தரும்' என்று தனிநாயகமும் போன்ற அறிஞர்கள் பாலை நிலத்தின் இயல்பை சுட்டிச் செல்கின்றனர். பாலை நிலத்தின் தன்மையை தொல்காப்பியர்,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனில்"

"ஏமப் பேரூர்ச் சேரியுஞ் சுரத்தும்"

"இடைச்சுர மருங்கின்" (தொல். நூற்.44)

"சுரமென மொழிதலும் வரைநிலை யின்றே"

எனக் குறிப்பிடுகிறார் (Ilampuranar, 1969). பாலைக்கு நண்பகலையும் வேனிலையும் பொழுதுகளாகக் குறிப்பிடும் தொல்காப்பியர், பாலையைச் சுரமென்றும் குறிப்பிடுகிறார். பாலை என்பது ஆண்டின் குறிப்பிட்ட பருவமொன்றின் நிலத்தியல்பின் மாற்றமாகும் எனும் கருத்தைக் கொண்டிருந்தார் என்பது தெளிவுபடுகிறது. நிலம் நால்வகை என்பதும் அவற்றின் கோடைக்காலத் திரிபு ஒன்று என்பதும் இவ்வைந்திலும் நிகழும் ஒழுக்கங்கள் கைக்கிளை முதல் பெருந்திணை ஈறாக ஏழு ஆகும் என்பதும் இவற்றின் மூலம் தெரிய வருகின்றன.

## கலித்தொகையில் நிலப்பாகுபாடு

சங்க இலக்கிய நூலான கலித்தொகையில் தொல்காப்பியர் வகுத்த அகத்திணை மரபு சார்ந்து முதற்பொருளின் ஒரு பகுதியாக விளங்கும் நிலம் இடம்பெறும் பாங்கு ஆராயப்பெறுகின்றது.

## முல்லை

புன்புலமும் காடும் சேர்ந்த நிலம் முல்லை என்றழைக்கப்படுகிறது. முல்லை நிலத்தைத் தொல்காப்பியர் ‘காடுறை உலகம்’ எனக் குறிப்பிடுகிறார். இம்முல்லை சார்ந்த மேட்டு நிலம் ‘குறும்பு’ என்றும்,‘புறவு’ என்றும் அழைக்கப்பெறும். முல்லைக்கலியில் ‘குறும்பு’ எனும் சொல்லாட்சி ஓரிடத்தில் காணப்படுகின்றது. அதனைச் சார்ந்திருப்பது ‘காடு’ அல்லது ‘கானம்’ எனப்படும். காட்டை ஒட்டியுள்ள பகுதி ‘புலம்’ எனவும், அப்புலம் ஆநிரைகள் மேய்தற்குரிய பரந்த இடமாதலின் ‘வியன்புலம்’ எனவும், விளைவிக்கும் நிலம்,‘புனம்’ எனவும், மனைப்பக்கமுள்ள தோட்டம் ‘பாட்டங்கால்’ எனவும் அழைக்கப்பெறுகின்றது. இம்முல்லை நிலம் ‘தினைக்கால்’ என்றும் அழைக்கப்பட்டுள்ளது. இக்கலிப்பாடல்களில் முதற்பொருளாகிய நிலத்திற்குச் சிறிதளவு முதன்மையே தரப்பட்டமை அறியமுடிகிறது.

## குறிஞ்சி

மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி. இப்பகுதியை ‘மைவரை உலகம்’ என்கிறார் தொல்காப்பியர். கலித்தொகையில் குறிஞ்சி நிலத்தைக் குறித்தற்கு ‘மலை’, ‘வரை’ எனுஞ் சொற்களும், அவ்வாறே ‘மலைத்தொடர்’ என்பதைக் குறிக்க, ‘அடுக்கல்’, ‘அடுக்கம்’ என்னும் சொற்களும் ஆளப்பெறுகின்றன. ‘மலைப்பிளவு’ அல்லது ‘பள்ளத்தாக்கு’, ‘விடர்’ என்றும், ‘விடரகம்’ என்றும் அழைக்கப்படுகின்றது.

மேற்குறித்த மலை, வரை, அடுக்கல், அடுக்கம், விடர், விடரகம், சாரல் என்னும் மலை சார்ந்த சொற்கள் அவற்றின் இயல்புகளோடு அகன்மலை, அணிமலை, நன்மலை, பெருமலை, விறன்மலை எனவும், அடுவரை, மால்வரை, விடர்வரை எனவும், அருவரை அடுக்கல், அகன்மலை அடுக்கம், படுமலை அடுக்கம், மால்வரை அடுக்கம் எனவும் நீடிரு விடரகம், வேய் நரல் விடரகம் எனவும், கல்லுயர் நனஞ்சாரல் எனவும் கலிப்பாக்களில் குறிக்கப்பெற்றுள்ளன.

## மருதம்

வயலும் வயல் சார்ந்த நீர்மிக்கப் பகுதி மருதம். இதனை ‘தீம்புனல் உலகம்’ எனத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

மருதக்கலியில் வயல், பழனம், செறு, கழனி எனப் பலவாறு மருதநிலம் அழைக்கப்பெற்றுள்ளது. மருத நிலத்தின் நீர்வளமும், நிலவளமும் தோன்றத் தகைமலர் பழனம், தகை பெறுகழனி, நீரார்செறு, பனிமலர்ப்பழனம், புள்ளிமிழ் அகல்வயல் என்றெல்லாம் அடைகொடுத்து பாடியுள்ளார் மருதக்கலி ஆசிரியர். மருதக்கலிப் பாடல்களில் பொழுதும் கருப்பொருளும் சார்த்தியே நிலத்தியல்பு கூறப்பெற்றுள்ளது.

## நெய்தல்

கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் நிலமாகும். இதனைப் ‘பெருமணல் உலகம்’ எனக் கூறுகிறார் தொல்காப்பியர்.

நீரும் நிலனும் சேர்ந்த நிலம் எனும் பொருளில் நெய்தல் நிலமானது,‘பாப்பு நீர்ந்தண் சேர்ப்பு’, ‘வயங்க நீர்த்தண் சேர்ப்பு’, ‘இலங்கு நீர்த்தண் சேர்ப்பு’, ‘வயங்கு நீர்ச்சேர்ப்பு’, ‘உரவுகீர்த்தண் சேர்ப்பு’ என்றெல்லாம் நெய்தற்கலியில் வழங்கப் பெற்றுள்ளன.

கடலை மிகவொட்டிய நெய்தல் நிலப்பகுதி ‘கால்’ எனப்படும். கடற்கரைக் கானலில் காணப்படும் வெண்மணல் பரப்பும், மணல்மேடும் ‘எக்கர்’ என்றழைக்கப்படும். இவ்வெக்கர் கடலிட்ட மணலாகிய மேடாதலின்,‘இடுமணல் நெடுங்கோடு’ என்றும், நீருற்றுடைய மணல்மேடாதலின் ‘உவறுநீர் உயர் எக்கர்’ என்றும், வரிகளையுடையதாதலின் ‘வரிமணல்’ என்றும், அழகுடைத்தாதலின் ‘முத்துறழ்மணலெக்கர்’

என்றும், கடலை பொருதுகின்ற மணல் மேடாதலின், 'உரவு நீர்த்திரை பொருது ஓங்கிய எக்கர்' என்றும் அழைக்கப்பெற்றுள்ளது. நல்லந்துவனார் தம்முடைய நெய்தற்கலியில் நிலத்தின் சிறப்பைச் சிறப்புற பாடியிருப்பதை அறியமுடிகிறது.

### பாலை

வறண்ட நிலப்பகுதியே பாலை நிலமாகும். கோடையில் முல்லை நிலமும், குறிஞ்சி நிலமும் தன் நிலையில் திரிந்து பாலையாய்க் காணப்படும். இதனை முல்லை திரிந்த பாலை, குறிஞ்சி திரிந்த பாலை என்றும் பிரித்துக் காணலாம்.

### முல்லை திரிந்த பாலை

முல்லை நிலம் கோடை வெப்பத்தில் திரிந்து பாலை நிலத்தின் தன்மையைப் பெறுகின்றது. அதனை,"புள்ளும் வழங்காப் புலம்புகொள் ஆரிடை(பா.கலி.4:6), களிறு வானிங்கு வைப்பின் வழங்காத்தேர் நீர்க்கவாஅம் கானம்'(பா.கலி.6:1-3) , 'அடிதாங்கு மளவின்றி யழலன்னவெம்மையாற் கடியவே காடு' (பா.கலி.10:6-7),'இலைதீந்த வுவவையாற் றுன்புறூஉத் தகையவே காடு' தளியுறு பறியாவே காடு' (பா.கலி.19:8) 'புயறுளி மாறிய போக்கரு வெஞ்சுரம்') எனும் இவ்வரிகள் மூலம் அறியலாம் (Arumugam, 1958). முல்லை நிலம் பாலையாக மாறி இவ்வாறு நிலத்தின் பெயர் வழங்கப்பட்டுள்ளது.

### குறிஞ்சி திரிந்த பாலை

குறிஞ்சி நிலம் கோடை வெப்பத்தால் திரிந்த பாலையாகக் காட்சியளிக்கின்றது. அதனை,

"வொண்கதிர் தெறுதலிற் சீறருங் கணிச்சியோன்
சினவலி னவ்வெயி வேறுபெற் றுதிர்வனபோல்
வரைபிளந் தியங்குந ராறுகெட விலங்கிய வழலவி
ராரிடை', 'மலையிறந்து செயல்சூழ்ந்த பொருள்',
'மலை வெம்ப', 'வரைபோக வலிந்து', 'விறன்,
மலை வெம்ப','கல்பிறங் காரிடை', 'விலங்கு
மலை வெம்பிய போக்கரு வெஞ்சுரம்',
'நெடுமலை வெஞ்சுரம்', 'குன்றழல் வெஞ்சுரம்'"

எனும் இவ்வடிகள் விளக்கி நிற்கின்றன. பாலையில் நிலத்தின் பெயர் இடம்பெற்றமை அறியமுடிகிறது. பாலைக்கலியில் குறிஞ்சி திரிந்த பாலை நிலமே பெரிதும் இடம்பெற்றுள்ளது.

## பொழுதுகள்

இயற்கை ஆற்றலின் ஒரு கூறுநிலம். அஃது அகத்திணை உயர்வுக்கு அடிப்படையாக விளங்குகிறது. அதனைப்போல மற்றொரு ஆற்றலான பொழுதும் உரிப்பொருள் உயர்வுக்கு உதவுகின்றது. மனிதவாழ்வு விளக்கம் பெற இயற்கை எத்துணையளவிற்கு உறுதுணையாக நிற்கின்றது என்பதனை முதற் பொருள்களாகும் நிலமும் பொழுதும் தெளிவாக்குகின்றன. முதற்பொருளின் ஒரு கூறாகும் பொழுது அகப்பாபடல்களில் அதன் இயல்புகளோடு கட்டப்படுதல் வேண்டும் என்பது தொல்காப்பியரின் கோட்பாடாகும். எனவே, பொழுதைக் குறித்துத் தொல்காப்பியர் கூறிய கோட்பாடுகளையும், அவை கலித்தொகைப் பாடல்களில் இடம்பெற்ற முறையினையும் இப்பகுதி

விளக்குகின்றது. அதற்கேற்ப இப்பகுதியானது பெரும்பொழுது, சிறுபொழுது என இரு கூறுகளாகப் பகுக்கப்பட்டு உரைக்கப்பெறுகின்றது.

## பெரும்பொழுது

ஒவ்வொரு நிலத்திற்கும் பெரும்பொழுது, சிறுபொழுதுகளாக வருபவை இவையிவை என வரையறுத்துக் கூறுவதே காலப்பகுப்பாகும். முதற்பொருளின் ஒரு கூறாகும் பொழுது அகப்பாடல்களில் அதன் இயல்புகளோடு கட்டப்படுதல் வேண்டும் என்பது தொல்காப்பியத்தின் விதியாகும். பெரும்பொழுது என்பது ஓர் ஆண்டின் ஆறு கூறிட்ட பகுதியாகும். அவை கார், கூதிர், முன்பனி, பின்பனி, முதுவேனில், இளவேனில் ஆகும். ஒவ்வொரு பெரும்பொழுதும் இரண்டிரண்டு திங்களை அகமாக உடையன. தொல்காப்பியர் ஒவ்வொரு திணைக்குரிய பெரும்பொழுதுகளையும், சிறுபொழுதுகளையும் தனித்தனி நூற்பாக்களில் கூறி, பெரும்பொழுதுகள் ஆறு, சிறுபொழுதுகள் ஆறு என்பதையும் தெளிவுப்படுத்துகிறார்.

## சிறுபொழுது

சிறுபொழுது என்பது ஒரு நாளினை ஆறு கூறிட்ட பகுதியாகும். அவை வைகறை, விடியல், நண்பகல், எற்பாடு, மாலை, யாமம் ஆகும். இவையும் முதற்பொருளின் ஒரு கூறாகத் திகழ்ந்து உரிப்பொருள் சிறக்க உதவுகின்றன. சிறுபொழுதுகள் திணைக்கேற்றவாறு தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருக்கின்றன.

## கலித்தொகையில் பொழுதுகள்

தொல்காப்பியரால் வகுக்கப்பெற்ற பெரும்பொழுது, சிறுபொழுது எங்ஙனம் கலித்தொகையில் இடம்பெற்றுள்ளன என்பதை விளக்கும் முறையில் இப்பகுதி அமைகின்றது. இவைமுறையே முல்லைக்குப் பொழுதுகள், குறிஞ்சிக்குப் பொழுதுகள், மருதத்திற்குப் பொழுதுகள், நெய்தலுக்குப் பொழுதுகள், பாலைக்குப் பொழுதுகள் என ஐந்திணை வரிசையின்படியே கூறப்பட்டுள்ளன.

## முல்லைக்குப் பொழுது

முல்லை நிலத்துக்குப் பெரும்பொழுதாகக் கார் காலமும், சிறுபொழுதாக மாலை நேரமும் தொல்காப்பியரால் குறிக்கப் பெற்றவைகளாகும். முல்லைக்கலிப் பாடல்கள் பதினேழினுள் கார்காலம் பற்றிய செய்திகள் நான்கு பாடல்களிலும், மாலைப் பொழுது பற்றிய செய்திகள் மூன்று பாடல்களிலும் வந்துள்ளன.

மாலை என்பது பகன்மாயந்தியாகிய எற்பாட்டிற்கும், யாமத்திற்கும் இடைப்பட்ட முன்னிரவாதலின், 'இரவு' என்றும், பகன்மாய்கின்ற நேரம் எற்பாடென்றும், எல் (பகலவன்) மறைந்த பின்வரும் மயக்கிருள் மாலை என்றும் வழங்கப்படுவதனால் 'எல்லிற்றுப் போழ்து' என்று மாலைப்பொழுது குறிக்கப்பட்டிருக்கின்றது. பிற சங்கப்பாடல்களில் முல்லைப் பொழுதுகள் வருணிக்கப்பட்டது போல் முல்லைக்கலியில் பொழுதுகள் வருணிக்கப்படவில்லை என்பது நோக்கத்திற்குரியதாகும்.

## குறிஞ்சிக்குப் பொழுது

குறிஞ்சித்திணைக்குப் பெரும்பொழுதுகளாகக் கூதிரும், முன்பனிக் காலமும், சிறுபொழுதாக நடுநாள் யாமமும் தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டுள்ளன.

குறிஞ்சிக் கலியிலுள்ள இருபத்தொன்பது பாடல்களில், எட்டுப் பாடல்களில் மட்டுமே கூதிர்க் காலமும், யாமமும் கூறப்பெற்றுள்ளன. அவற்றுள் ஆறு பாடல்களில் வெளிப்படையாகவும்,

இருபாடல்களில் குறிப்பாகவும் கூதிர், யாம வருணனைகள் காணப்பெறுகின்றன. அதனை,

“பெருமலை மிளிர்ப்பன்ன சாற்றுடைக்

குனைபெயல்” “படுமழையடுக்கத்து”

“கனைபெயல்”

எனும் இப்பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன. பெருமலையிலே பெய்த கனைபெயல் எனவும், படுமழையடுக்கம் எனவும் கூதிர்ப்பருவம் விளக்கப்படுகின்றது. அவ்வாறே சிறுபொழுதாகிய யாமமும்,

“இருளிடை என்னாய் நீ”, “யாமத்தும் துயிலலள்”

“இனையிரு ளிதுவென”, “மன்பதை யெல்லாம்

மடிந்த இருங்கங்குல்”

எனப் பாடப்பட்டமையும் அறியமுடிகிறது. இருபொழுதுகளும் ஒருசேர இடம்பெற்றமையும்,‘இடியுமிழ் மரங்கிய விரவு பெலல் நடுநாள்’, ‘ஏறிரங்கிருளிடை’ போன்ற வரிகளால் அறியமுடிகிறது.

## மருதத்துக்குப் பொழுது

மருதத் திணையில் அறுவகைப் பருவமும் பெரும் பொழுதாகவும், வைகறையும் விடியலும் சிறபொழுதாகவும் விளங்குகிறது.

## பெரும்பெழுது

மருதக்கலியில் கார், கூதிர், பின்பனி, இளவேனில் ஆகிய நான்கு பெரும்பொழுதுகளும் இடம் பெற்றுள்ளன. வையையாற்றை வருணிக்கும்போது,

“கார்முற்றி இணரூழ்த்த கமழ்தோட்ட”

எனும் வரியில் கார்காலமும்,

“பாடு பெயல்நின்ற பானா ளிரவு”,

“கனைபெயல், தண்டுளி வீசும் பொழுது”

முதலிய வரிகளில் (ம.கலி.25:6,22) கூதிர்காலமும் இடம்பெற்றுள்ளது (Arumugam, 1958). பின்பனிக் காலமும்,

“பனியொரு திறம்வாரப் பாசடைத் தாமரைத்

தனிமலர் தளைவிடூஉந் தண்டுறை நல்லூர்”

“மிகநனி சேர்ந்தஅம் முகைமிசை அம்மலர்

அகவிதழ்த் தண்பனி உறைத்தரும் ஊரகேள்”

“முகைமலர்ந் தன்ன முயக்கிற் றகையின்றே

தண்பனி வைகல் எமக்கு”

எனப் பாடப்பட்டமையும் அறியமுடிகின்றது (Arumugam, 1958). இருபத்தியேழாவது பாடல் இளவேனிற் காலத்தைச் சுட்டியிருக்கின்றது.

## சிறுபொழுது

மருதத்தின் சிறுபொழுதாகிய வைகறையும் விடியலும் பலவிடங்களில் காணப்படுகின்றன.

சிறுபொழுதில் வைகறை இடம்பெற்றமைக்குச் சான்றாக,

"வதுவையங் கமழ்நாற்றம் வைகறைப்பெற்றதை"

"சிறுகாலை யிற்கடை வத்து"

எனும் வரிகளாலும், விடியலுக்கு,

"போதவிழ் பனிப்பொய்கைப் புதுவது தளைவிட்ட

தாதுசூழ் தாமரைத் தனிமலர்"

எனும் இவ்வடிகளும் சான்றாக திகழ்கின்றன (Arumugam, 1958). இவ்வாறு விடியல் பல இடங்களில் இடம்பெற்றுள்ளன.

## நெய்தலுக்குப் பொழுதுகள்

நெய்தலுக்குப் பெரும்பொழுது அறுவகையும், சிறுபொழுது எற்பாடும் என வகுத்துள்ளனர்.

## பெரும்பொழுது

நெய்தற்கலியில் இப்பாடல்,

"இருங்கடல் ஒலித்தாங்கே இரவுக்காண் பதுபோலப்

பெருங்கடல் ஓதீநீர் வீங்குபு கரைசேரப்

போஓய வண்டினாற் புல்லென்ற துறைய வாய்ப்

பாயல்கொள் பவைபோலக் கயமலர் வாய்கூம்ப

ஒருநிலையே நடுக்குற்றிவ் வுலகெலாம் அச்சுற

இருநிலம் பெயர்ப்பன்ன எவ்வங்கூர் மகுண்மாலை"

எனப் பாடப்பட்டுள்ளது (Arumugam, 1958). இதில் வரும்'இகலிடும்பனி;','கடும்பனி' எனும் சொற்றொடர்கள் முன்பனிக் காலத்தைக் குறிக்கிறது. அதேபோல் வாடை காலமும்,

"தோள்துறந் தருளா வர்போல் நின்று

வாடை தூக்க வணங்கிய தாழை"

எனும் இப்பாடல் வரிகளால் இடம்பெற்றமையும், அதே நேரத்தில்,

"இயங்கெயி லெயப்பிறந்த எரிபோல எவ்வாயுங்

கனைகதிர் தெறுதலின் கடுத்தெழுந்த காம்புத்தி

மலைபரந்து தலைக்கொண்டு முழங்கிய முழங்கன்

மயங்கதர் மறுகலின் மலைதலைக் கொண்டென

விசும்புற நிவந்தழலும் விலங்கரு வெஞ்சுரம்"

எனும் இப்பாடலடிகள் முதுவேனில் காலத்தையும் வெளிப்படுத்தி நிற்கின்றன (Arumugam, 1958).

## சிறுபொழுது

நெய்தலுக்குரிய சிறுபொழுதாகிய 'எற்பாடு' பல இடங்களில் வருகின்றன. அதில்,

"பகல்நுங்கி யதுபோலப் படுசுடர் கல் சேர",

நிரைகதிர்க் கனலி பாடொடு பகல்செல",

"கல்சேர்பு ஞாயிறு கதிர்வாங்கி மறைதலின்"

என சில பாடலடிகள் மட்டும் சான்றாகக் காட்டப்பட்டுள்ளன (Arumugam, 1958). இவ்வாறு நெய்தல் கலியில் பெரும்பொழுதுகளும், சிறுபொழுதும் இடம்பெற்றுள்ளன.

## பாலைக்குப் பொழுதுகள்

பாலைக்குப் பெரும் பொழுதுகளாக இளவேனில்,முதுவேனில், முன்பனிக்காலங்களும், சிறுபொழுதாக இவற்றின் நண்பகலும் தொல்காப்பியரால் சுட்டப்பெற்றுள்ளன.

## பெரும்பொழுது

பாலைக்கலிப் பாடல்கள் சிலவற்றில் இளவேனிற் காலமும், சிலவற்றில் முதுவேனில் காலமும், கூறப்பட்டுள்ளன. அவற்றில்,

"எழுஉறழ் தடக்கையின் இனம்காக்கும் எழில் வேழம்,

அழுவம் சூழ், புகை அழல் அதர்பட மிதித்துத் தம்

குழுவொடு புணர்த்து போம், குன்று அழல் வெஞ்சுரம்"

எனும் பாடல் வரிகள் பாலையின் கொடுமையை விளக்குகிறது (Arumugam, 1958). அதாவது தன் இனத்தினைக் காக்கும் அழகினை உடைய வேழம், காட்டினை சூழ்ந்து நின்ற புகையையும் அழலையும் வழிபடும்படி மிதித்துத் தன் குழுவொடு சேர்ந்து போகும் குன்று சூழ்ந்த வெய்யசுரம், எனப் பாலையின் முதுவேனில் கால நிலையை விளக்குகிறது. இதுபோல பல பாலை நில பொழுதுகள் பற்றி பாலைக்கற குறிப்பிடுகிறது.

இரு இடங்களில் மட்டும் பின்பனிக் காலமும் பாலைக்குரியதாகக் காணப்படுகின்றது. அவை,

"பனியேற்ற விரவுப்பன் மலர்தீண்டி

நோய் சேர்ந்த வைகலான்"

"முகை வெண்பல் நுதிபொர முற்றிய கடும்பனி"

எனும் மேற்கண்ட இப்பாடலடிகளாகும். இவ்வாறு பெரும்பொழுது சுட்டப்பட்டுள்ளன (Arumugam, 1958).

## சிறுபொழுது

முதுவேனிலை வருணிக்கும் பாடல்களில் மட்டும் சிறுபொழுதாகிய நண்பகல் இடம்பெறுகின்றது. சான்றாக,

"ஒண்கதிர் தெறுதலின்", ஞாயிறு கடுகுபு கதிர்

முட்டிக் காய்கினந் தெறுதலின்","விரிகதிர் தெறுதலின்"

"கனைகதிர் தெறுதலின்" "செல்கதிர் ஞாயிறு செயிர்

சினம் சொரிதலின்"

எனும் இப்பாடல்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு பாலை நிலத்தில் சிறுபொழுது கொண்டு பாடல் பாடப்பட்டமை வெளிப்படுகிறது.

## முடிவுரை

அகப்பாடல்களின் வரையறைக்கேற்ப முதல், கரு, உரிப்பொருள்கள் அமைகின்றன. முதற்பொருளும், கருப்பொருளும் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் வரும் வேளையில் உரிப்பொருள் வெளிப்படையாகவே வருகின்றது. நான்கு வகை நிலங்களைத் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். நால்வகை நிலங்களின் திரிபே பாலை என்பதையும் அறிய முடிகிறது.

முல்லைக்கலியில் நிலம் பெறும் இடம் சிறிதளவேயாகும். குறிஞ்சி பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுவதோடு, நிலத்தியல்போடு விளங்குகிறது. மருதக்கலியும், நெய்தற்கலியும் அதனதன் இயல்போடு கட்டமைக்கப்பட்டுள்ளன. பாலையும், இயல்பு மாறிய திரிந்த நிலையில் வெம்மையின் கொடுமையை விளக்கும் நிலமாகவே விளங்குகிறது. முல்லைக்கலியில் பொழுதுகளுக்குச் சிறப்பிடமில்லாமலும், பொழுது குறிப்பிட்ட இடங்களில் அதற்கு சிறிய இடமே அளிக்கப்பெற்றுள்ளது.

குறிஞ்சிக்கலியில் அத்திணைக்குரிய முன்பனிக் காலம் ஓரிடத்தில் கூட இடம்பெறவில்லை. மருதக்கலியில் கார், கூதிர், பின்பனி, இளவேனில் ஆகிய பெரும்பொழுதுகளும் வைகறை, விடியல் முதலான சிறுபொழுதுகளும் இடம் பெற்றிருக்கின்றன.

நெய்தற்கலியில் சிறுபொழுதான எற்பாடு பல இடங்களில் இடம்பெற்றிருக்கிறது. பாலைக்குரிய பொழுதுகள் பாலைக் கலியில் இடம்பெற்றிருக்கின்றன.

## Reference

Arumugam, N., (1958) Kalithogai, Kanni Nilaiyam, Erode, India.

Arunachalam, M., (1975) Tolkappiyam Poruḷatikāram Akattinaiyiyal Uraivaḷam, Madurai University, Madurai, India.

Balasubramanian, C., (1962) illakiya anikal, Chennai, India.

Ilampuranar, (1969) Tholkappiyam Ezhuthadhigaram, Kalaga veliyedu, Chennai, India.

John Samuvel, (1977) Thiranaaivu Sinthanaigal, Mani Publications, Madurai, India.

Manickanar, Va. Suba., (1962) Tamil Kadhal, Paari Nilaiyam, Chennai, India.

Natchinarkkiniyar, (1961) Tholkaapiyam Porulathigaram, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Chennai, India.

Poornachandran, (2009) Amaippiyamum Pinamaippiyamum, Adaiyalam Publications, Puthanathani, India.

Stephen, G., (2013) Amaipiyal kotpadukalum aaivukalum, New century book house, Chennai, India.

Thani Nayagam, X.S. (1953) Nature in Ancient Tamil Poetry, Concept and Interpretation, Tamil Literature Society, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License